தென் துளிர்

மாதாந்த இதழ்

தென் துளிர்

மாதம் : தை | இதழ் : 01





பிரதேச செயலகம் - தென்மராட்சி

நேர்மையான நிர்வாகம்-சிறந்த பொதுச்சேவை-மக்களின் நம்பிக்கை

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ மாதாந்த செய்தி வெளியீடு



சிறப்புச் செய்தி

2026 ஆண்டுக்கான அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு

முக்கிய அமர்வு

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் - 2026

முன்னேற்ற அறிக்கை

தாபனக் கிளையின் வருடாந்த முன்னேற்ற அறிக்கை - 2025

தொகுப்பு: தாபனக் கிளை
பிரதேச செயலகம் - தென்மராட்சி

உத்தியோகபூர்வ அங்கீகாரம்
பிரதேச செயலாளர், தென்மராட்சி

தலைமைச் செய்தி 01.01.2026 · தென்மராட்சி

2026 ஆம் ஆண்டிற்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு

2026ம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு 01-01-2026 காலை 8.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது புதிய ஆண்டினை வரவேற்று தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 8.30மணிக்கு பிரதேச செயலாளர் அவர்களால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. வருடத்திற்கான முதல்நாள் கடமைகளை ஆரம்பிக்கும் அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலாளர் திரு. எவ். சி. சத்தியசோதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களுக்காகவும் பல்வேறு அனர்த்தங்களில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளரால் அரசாங்கத்தின் புதிய எண்ணக்கருக்களான வறுமையை ஒழித்தல், டிஜிற்றல் மயமாக்கல், க்ளீன் ஸ்ரீலங்கா ஆகிய எண்ணக் கருத்துக்களை உள்ளடக்கியதாக சிறப்புரை ஆற்றியிருந்ததுடன் அண்மையில் நடைபெற்ற வெள்ள அனர்த்தத்தின் பாதிப்புக்கள் அவற்றில் இருந்து மீள் எழும் திட்டங்கள் தொடர்பிலும் கருத்துரைத்த அதேவேளை இந்த வருடம் அனைவரது வாழ்வில் மிகுந்த சந்தோசங்களையும் வளங்களையும் கொண்டு வரவேண்டுமென புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

> *இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், கிளைத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.*







சமூர்த்தி அபிவிருத்தி 02.01.2026 வெள்ளிக்கிழமை

20 பயனாளிகளுக்கு தையல்தொழில் மேற்கொள்வதற்கான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டது

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, வரணி வங்கிகளிற்குட்பட்ட 20 பயனாளிகளுக்கு தையல்தொழில் மேற்கொள்வதற்கான தையல் இயந்திரங்கள் 02.01.2026 வெள்ளிக்கிழமை அன்று மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் அவர்களினால் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் சமூர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், பயனாளிகள் கலந்துகொண்டனர்.





வாழ்வாதாரமும் சமூகப் பாதுகாப்பும் பயனாளர் திட்டங்கள்

கொடிகாமம் வங்கி வலயம் · 02.01.2026

மூன்று பயனாளிகளுக்கு கடற்தொழில் மேற்கொள்வதற்கான வலைகள் வழங்கப்பட்டது

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம் வங்கி வலயத்திற்குட்பட்ட மூன்று பயனாளிகளுக்கு கடற்தொழில் மேற்கொள்வதற்கான வலைகள் 02.01.2026 வெள்ளிக்கிழமை அன்று மதிப்பிற்குரிய பிரதேச செயலாளர் அவர்களினால் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் சமூர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், பயனாளிகள் கலந்துகொண்டனர்.




இலங்கை சமூக பாதுகாப்பு சபை · 05.01.2026

உத்தியோகத்தர்களுக்கு மெச்சுரைகளும் பாராட்டு கடிதங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதிய திட்டத்தில் பணச்சேகரிப்பு அடிப்படையில் குறிப்பிட்ட இலக்கினை அடைந்தமைக்காக 17 உத்தியோகத்தர்களுக்கு மெச்சுரைகளும் 33 உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு கடிதங்களும் பிரதேசசெயலாளரால் 05.01.2026 பகுதிநாட் கூட்டத்தில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.





PSDG திட்டம் / அனர்த்த முகாமைத்துவம் · 06.01.2026

மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கான உதவிப் பொருட்களுக்கான பொதி வழங்கும் நிகழ்வு

யாழ் மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் PSDG திட்டத்தில் ஊடாக டித்வா இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 03 மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கான உதவிப் பொருட்களுக்கான பொதி வழங்கும் நிகழ்வு 06.01.2026 ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





நிர்வாகம் மற்றும் சமூகப் பங்கேற்பு

பொது நிர்வாகச் செயல்பாடுகள்

தேருநர் இடாப்பு / கிராம அலுவலர்கள் · 07.01.2026

தேருநர் இடாப்பு மீளாய்வு - 2026

2026 ம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பாக கிராம அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்புகள் பிரதேச செயலாளர் திரு F.C சத்திய சோதி தலைமையில் 07.01.2026 இன்று காலை 11.30 மணிக்கு நடைபெற்றது. இவ் அறிவுறுத்தல் வகுப்பில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு இ.சசீலன், உதவி பிரதேச செயலாளர்,நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கைதடி சமுர்த்தி வங்கி · 13.01.2026

தென்மராட்சி பிரதேச செயலக கைதடி சமுர்த்தி வங்கியின் பொதுசபைக் கூட்டம்

தென்மராட்சி பிரதேச செயலக கைதடி சமுர்த்தி வங்கியின் பொதுசபைக் கூட்டமானது மதிப்பிற்குரிய பிரதேச செயலாளரின் பங்குபற்றுதலுடன் 13.01.2026 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப்பணிப்பாளர், வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். 2026 ம் ஆண்டிற்கான புதிய நிர்வாகதெரிவு இடம்பெற்றது. தலைவராக திரு. இ. யோகேஸ்வரன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்.





ஊழியர் நலன்புரிச் சங்கம் · 19.01.2026

தென்மராட்சி பிரதேச செயலக பொங்கல் நிகழ்வு - 2026

அனைத்து உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் ஊழியர் நலன்புரி சங்கமும் இணைந்து மிக விமர்சையாக நடாத்திய பிரதேச செயலக பொங்கல் நிகழ்வானது 2026.01.19 இன்று காலை பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது.







நலம், பாதுகாப்பு, விழிப்புணர்வு மக்கள் நலத் திட்டங்கள்

சனாதிபதி நிதியம் · 20.01.2026

மருத்துவ உதவிக் கொடுப்பனவு வழங்கப்பட்டமை

சனாதிபதி நிதியத்தின் நடவடிக்கைகளை பிரதேச மட்டம் வரை பன்முகப்படுத்தல் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நான்காவது மருத்துவ உதவிக் கொடுப்பனவாக ரூபா 150,000.00 பெறுமதியான காசோலை திரு. செ. புஷ்பநாதன் (503574) அவர்களுக்கு 20.01.2026ம் திகதி வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர், கணக்காளர், சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் விடய உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



IOM / VTA கைதடி · 21.01.2026

IOM நிறுவனத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் கைதடி தொழிற்பயிற்சி அதிகாரசபை நிலையத்தில்(VTA) கல்வி பயிலும் மாணவர்களுக்கு 21.01.2026 அன்று IOM நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் பாதுகாப்பான புலம்பெயர்தல், மனித ஆட்கடத்தல், மனித விற்பனை தொடர்பாகவும் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு செல்வதால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இதில் வளவாளர்களாக IOM நிறுவனத்தின் திட்ட இணைப்பாளரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இணைந்து தங்களது கருத்துக்களை வழங்கினார்கள்.

இணுவில் பொது நூலகம் அனுசரணை





மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் குடும்பங்களுக்கு நுளம்புவலைகள் வழங்கி வைக்கப்பட்டது

இணுவில் பொது நூலகத்தின் அனுசரனையுடன் நலிவுற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் குடும்பங்களுக்கு 70 நுளம்புவலைகள் வழங்கிவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர், நிதி உதவியாளர், சமூகசேவை உத்தியோகத்தர், உளவளதுணை உத்தியோகத்தர் மற்றும் இணுவில் பொதுநூலக போசகர் இரா. அருட்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டனர்.







கல்வி, பெண்கள் முன்னேற்றம், சிகிச்சை உதவி சமூக மேம்பாடு

இடைக்குறிச்சி அ.த.க. பாடசாலை · 21.01.2026

தொகுதிப் பாடத் தெரிவு சம்பந்தமான கலந்துரையாடல்

யா / இடக்குறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 11 மாணவர்களுக்கான உயர்தர பாடத்தெரிவு மற்றும் தரம் 9 மாணவர்களுக்கான தொகுதிப் பாடத் தெரிவு சம்பந்தமான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை 21.01.2026 தென்மராட்சி பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பாடசாலை அதிபர் தலைமையில் நடாத்தப்பட்டது.





World Vision அனுசரணை · 27-28.01.2026

மதிநிலை மகளிர் திட்டம் (Women Rise Up project)

World Vision நிறுவனத்தின் அனுசரணையில் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெண் தலைமைத்துவ அமைப்புகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான மதிநிலை மகளிர் திட்டம் (Women Rise Up project) நிகழ்ச்சி 27,28.01.2026 ஆம் திகதிகளில் தென்மராட்சி பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நடாத்தப்பட்டது.






சனாதிபதி நிதியம் / இருதய சிகிச்சை · 28.01.2026

இருதய சத்திர சிகிச்சைக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது

சனாதிபதி நிதியத்தின் பிரதேச செயலகம் வரை பன்முகப்படுத்துதல் திட்டத்தின் மூலம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இருதய சத்திர சிகிச்சைக்கான ஐந்தாவது கொடுப்பனவாக ரூபா 250,000/- பெறுமதியான காசோலை பாலாவி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சி. சுரேஸ் அவர்களுக்கு 28.01.2026ம் திகதி பிரதேச செயலாளர் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் கணக்காளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



பிரதேச ஒருங்கிணைப்புக் குழு · 28.01.2026

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் - 2026





தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 2026.01.28 புதன்கிழமை பி.ப 2மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா அவர்களும் கலந்துகொண்டதோடு கௌரவ நகரசபை தவிசாளர் வடிவேல் ஸ்ரீபிரகாஷ், கௌரவ பிரதேச சபை தவிசாளர் பொன்னையா குகதாசன், நகர, பிரதேச சபைகளின் அழைக்கப்பட்ட கௌரவ உறுப்பினர்கள், திணைக்களத்தலைவர்கள் /பிரதிநிதிகள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பான உத்தியோகத்தர்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் இக்கூட்டம் இவ்வருடத்தின் முதலாவது கூட்டமாக அமைவதால் நல்ல தொடக்கங்கள் நல்ல முடிவுகளை தரும் என்ற நல்ல சிந்தனையுடன் எமது மக்களின் நல்வாழ்வுக்கான தேவைப்பாடுகளை சரியான வகையில் இச் சபையில் முன்வைக்குமாறும் வாத விவாதமாக

உருவாக்கவேண்டாம் எனவும் சுமூகமான முறையில் ஆக்கப்பூர்வமாக பிரச்சனைக்குரிய தீர்வுகளை முன்வைக்குமாறும் தனது வரவேற்புரையில் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து கௌரவ ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் தனது தலைமையுரையில் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்று பல எதிர்பார்ப்புகளிற்கு மத்தியில் புதியதொரு ஆண்டின் தொடக்கத்தில் இப் பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இக் கூட்டத்தில் 2026ம் ஆண்டில் முன்னுரிமையடிப்படையில் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அனர்த்த தணிப்பு செயற்திட்டங்கள், வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் நிதியீட்டத்தால் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்ட பயனாளிகள் பட்டியல், கைதடி மற்றும் சாவகச்சேரி கமநலசேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டங்கள்,தனங்கிளப்பு கிராம அலுவலர் பிரிவில் சுற்றுலா அபிவிருத்திக்காக சுமார் 3912 மீற்றர் நீளமான புதிய வீதி நிர்மாணிப்பு என்பவற்றிற்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி வழங்கபட்டுள்ளதுடன் தனங்கிளப்பு கிராம அலுவலர் பிரிவில் சுற்றுலாத்துறை அபிவிருத்திசார் தனியார் முதலீட்டிற்கு நீண்டகால குத்தகை நோக்கில் காணி வழங்குவது தொடர்பாகவும் வடமாகாண சுற்றுலா பணியகத்திற்கு கைதடி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் காணி வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்தில் இயங்காத கடைகளை மீளப்பெற்று வேறு பொருத்தமான நபர்களுக்கு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் 19.09.2025இல் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பான முன்னேற்ற நிலைமை விரிவாக ஆராயப்பட்டு மேற்கொள்ளப்படவேண்டிய துரித நடவடிக்கை தொடர்பாக உரிய திணைக்களங்களிற்கு ஒருங்கிணைப்பு குழு தலைவரால் வழிகாட்டல் வழங்கப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவில்

தென்மராட்சி பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிகழ்ச்சி திட்டத்தின் மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் எந்தவிதமான திணைக்களங்களின் பராமரிப்பிலும் இதுவரை இல்லாத வாய்க்கால்கள், குளங்கள்,வீதிகள் என்பவற்றை பொருத்தமான திணைக்களங்களினுள் உள்வாங்குவது தொடர்பாகவும் கைதடி நிலத்தடி நீரினை பாதுகாப்பது தொடர்பாகவும்,சரசாலை ஆயுள்வேத மருந்தகத்தினை சீராக இயங்கச்செய்வது தொடர்பாகவும் தனங்கிளப்பு பகுதியில் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் திண்மக் கழிவகற்றல் நடவடிக்கையினை சூழல் நேயம் மிக்கதொன்றாக வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பாகவும், மலக்கழிவுகளை தென்னம்தோட்டங்களில் கொட்டுவதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்ப்பதற்கு நிலைபேறான பொறிமுறை ஒன்றை உருவாக்கவேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், பிரதேசசபை,நகரசபை என்பவற்றால் புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் இப் பிரதேசத்தின் ஏனைய அரச திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் அரச திணைக்களங்களின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் உரிய திணைக்களங்களால் முன்வைப்பு (Presentation) மேற்கொள்ளப்பட்டது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பிரஜாசக்தி வேலைத்திட்டம் தனியொரு கட்சிசார் நடவடிக்கையாக முன்னெடுப்பதால் தமது ஒத்துழைப்பினை நகர சபை, பிரதேச சபை வழங்காது என சாவகச்சேரி நகர சபை, பிரதேசசபை தவிசாளரினால் சபையில் அறியதரப்பட்டதுடன் அதுதொடர்பான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றது

இக்கூட்டம் பி.ப 6.45 மணிக்கு நிறைவுபெற்றது.

சேவையில் சிறக்கும் பெண்மை

கல்வியில் சிறந்து கலைகளில் மிளிர்ந்து
காலத்தை வென்று கடமைகள் புரிந்து
அரச சேவையினை அர்ப்பணிப்புடன் செய்யும்
அத்தனை பெண்களும் பெருமை மிக்கவர்கள்!

அன்னையின் வயிற்றிலே ஆசீர்வதிக்கபபட்டவர்கள்
அன்பான குடும்பத்தின் ஆணி வேர்கள் அவர்கள்
வாழ்வின் முன்னேற்றத்திற்காய் ஏணியாய் நின்று
வழிகாட்டியாய் வாழ்பவர்கள்.



தடைகள் ஆயிரம் வந்தாலும் தளராத இதயம் கொண்டு
தன்னம்பிக்கையுடன் திகழ்பவர்கள்.
சோர்வுகள் இருந்த போதும் சிரிப்பைத் தொலைத்திடாது
சோதனையிலும் சாதனை படைப்பவர்கள்.



குற்றம் பல சொல்ல சுற்றம் இருந்தாலும்
குறையாத அன்புடன் குடும்பத்தைப் பராமரிப்பார்.
ஏமாற்றங்கள் பல வலிகள் தந்தாலும்,
ஏற்றமுடன் வாழவே என்றும் உழைப்பார்.



வறுமையைப் போக்கும் விடிவெள்ளி,
வருமானத்திலும் அவரின் பங்கு சரிபாதி.
பலரின் வாழ்வில் திசைகாட்டி
பார் போற்றும் ஒர் நாள் புகழ் பாடி.

துணிந்து நில் கடந்து செல், நேரம் தவறாது
தன் பணியைத் தவறின்றிச் செய்திடில்,
தன்னம்பிக்கை நிலைக்கும்!
அரச சேவை என்றும் சிறக்கும்!

திருமதி. நிஷாந்தன் நிரோசினி
அபிவிருத்தி உத்தியோகத்தர்














திருமதி. நிறோஜினி வியூகன்

வருடாந்த புள்ளிவிபரத் தொகுப்பு

தாபனக் கிளை - 2025

தாபனக் கிளையின் வருடாந்த முன்னேற்ற அறிக்கை - 2025

தென்மராட்சி பிரதேச செயலக தாபனக் கிளையினால் 2025 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட முக்கிய சேவைகள் மற்றும் அனுமதி வழங்கல்களின் உத்தியோகபூர்வ புள்ளிவிபர அறிக்கை

சேவை / விடயம் (Category)	எண்ணிக்கை (Total)	ஒப்பீட்டு விபரம்
Bursary	136	
Mahapola	143	
முறைப்பாடு	104	
வருமானச் சான்றிதழ்	166	
மணல்	800	
மண்	100	
பனை	700	
மரம்	900	
கால்நடை	250	

திருமதி. நிறோஜினி வியூகன்

தென் துளிர் இதழ் குழு

திரு F.C சத்திய சோதி
(பிரதேச செயலாளர்)

திருமதி லாகினி நிருபராஷ்
(உதவி பிரதேச செயலாளர்)

திருமதி சுபா தர்சன்
(தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர்)

திரு லோ.ஜெசிகரன்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)

திருமதி லாவண்யா சதாரூபன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

மாதாந்த இதழாசிரியர்கள்

திருமதி.ஜெயஸ்ரீ சிவானந்தராசா
(நிர்வாக உத்தியோகத்தர்)

திருமதி. நிறோஜினி வியூகன்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)

திருமதி.சிவானி பவரூபன்
(முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)

திருமதி.நிரோசினி நிசாந்தன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)